பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை ... காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 28 (11—7—68) வியாழன் ★ வெளியூர்: ஆனி 29 (12—7—68) வெள்ளி [இதழ்: 23

மூடிய ஆலை திறக்கிறது!

கோவை, ஜூலை 11—

புஞ்சைப் புளியம்பட்டியிலுள்ள வி. ஆர். துணி ஆலை, ஜூலை 15-ம் நாளிலிருந்து மீண்டும் இயங்கும்.

250 தொழிலாளர்கள் பணியாற்றும் இந்த ஆலை இவ்வாண்டு சனவரியிலிருந்து மூடப்பட்டிருக்கிறது.

ஆலையை மீண்டும் திறப்பது சம்பந்தமாகத் தொழிலாளர் நலத் துறை அதிகாரி முன்னிலையில் நிர்வாகத்தினருக்கும்—தொழிலாளர் சங்கத்துக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டது.

டில்லியில் அண்ணா முயற்சி வெற்றி

ஆலைகளின் நூல் தேக்கம் தவிர்க்கப்படும்

புதுடில்லி, ஜூலை 10—

தென்னிந்தியாவில் உள்ள நூற்பாலைகளில தேங்கிக் கிடக்கும் நூல்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் இன்னும் இரண்டு நாட்களில் தொடங்கிவிடும்.

மத்திய வணிகத் துறை அமைச்சர் தினேஷ் சிங் இத்தகவலை தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் தெரிவித்தார்.

வணிகத் துறைச் செயலாளர் கே. பி. லால, கூட்டுச் செயலாளர் வி. என். பானர்ஜி, தமிழகத் தொழில் துறைச் செயலாளர் ஜி. சுப்பிரமணியம், திரு. கே. சுந்தரம் எம்.பி. ஆகியோரும் உடன் இருந்தனர்.

ஆலைகளில் ஏராளமான நூல்கள் தேங்கிக் கிடப்பதை அண்ணா அவர்கள் எடுத்துரைத்து, விரைவில் அவற்றை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

இவ்வாண்டு ஜூன் மாத நடுவில் 161-இலட்சம் கிலோகிராம் வரை நூல் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகவும், சென்ற ஆண்டு இதே காலத்தில் 99-இலட்சம் கிலோகிராம் தான் இருந்ததாகவும் அண்ணா சுட்டிக் காட்டினார்.

இந்த நூல் தேக்கத்தைத் தவிர்க்க, தென்னிந்திய

தமிழகப் பஞ்சாலைகள் நிதி நெருக்கடி

டில்லி அமைச்சருடன் அண்ணா பேச்சு

புதுடில்லி, ஜூலை 10—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங்கைச் சந்தித்து தமிழகத்தில் பஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி குறித்து விரிவாகப் பேசினார்.

ஆலை உரிமையாளர்கள் சங்கத்துங்கு ஸ்டேட் பாங்கு மூலம் பணவுதவி அளிக்கப்படும்.

பஞ்சாலைகளுக்காக மத்திய அரசு அளித்த ரூ. 5 கோடி நிதி இன்னும் தமிழக அரசுக்குக் கிடைக்கவில்லை என்பதை அப்போது தினேஷ் சிங்கின் கவனத்துக்கு அண்ணா கொணர்ந்தார்.

"மத்திய அரசு கொடுப்பதாக உறுதி அளித்துள்ள தொகை தென் இந்திய ஆலை உரிமையாளர்களுக்கு இந்த வார வாக்கில் கொடுக்கப்படும்" என்று அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

நாவலருக்கு நாற்பத்தொன்பது!

சென்னை, ஜூலை 11—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவரும், தமிழக அரசின் கல்வி -- தொழில் அமைச்சருமான திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு இன்று 49-வது பிறந்தநாளாகும்.

'நாவலர்' என்றும், 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்றும் பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழகத் தோழர்களிடையே மட்டுமன்றி, நாட்டு மக்களனைவரிடையேயும் நல்லன்பையும் நன்மதிப்பையும் பெற்றவராவார்.

நாற்பத்தெட்டு வயதைக் கடந்து இன்று நாற்பத்தொன்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாவலர் அவர்கள், எல்லா வளமும் நலமும் பெற்று பல்லாண்டுகள் வாழவேண்டுமென்று நாட்டுமக்களோடு சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம்.

வாழ்க்கைக் குறிப்பு

தஞ்சை மாவட்டம் வடக் காலத்தூரைச் சேர்ந்த திரு. இராசகோபாலருக்கும் – திருமதி மீனாட்சிசுந்தரம் அம்மையாருக்கும் 11—7—1920-ல் பிறந்த திரு. நெடுஞ்செழியனின் இயற்பெயர் நாராயணசாமியாகும்.

பட்டுக்கோட்டையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பி.ஏ. ஆனர்சு படித்து எம்.ஏ. பட்டம் பெற்ற திரு. நெடுஞ்செழியன், தம் கல்லூரிப் பருவத்திலேயே தமிழ்ப் பற்றும், தன்மதிப்பியக்கத்தில் ஈடுபாடும் கொண்டதன் விளைவாகத் தம் பெயரை, 'நெடுஞ்செழியன்' என மாற்றிக் கொண்டார்.

பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், திரு. நெடுஞ்செழியன் அவர்களும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். அவர்கள் இருவரும் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களாலும் அறிஞர் அண்ணா அவர்களாலும் ஈர்க்கப்பட்டு, குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், பொதுவாக மாணவர் உலகிலும் சுயமரியாதை—திராவிட இயக்கக் கருத்துக்கள் பரவ முன்னோடிகளாக இருந்து பணியாற்றினர்கள்.

பேச்சாளர்

சிறந்த நாவன்மை படைத்த மாணவராகத் திகழ்ந்த நெடுஞ்செழியன், பல்வேறு பேச்சுப் போட்டிகளில் பரிசுகள் பெற்றிருக்கிறார்.

கல்லூரியில் பயிலும் போதே, திராவிட மாணவர் இயக்கக் கூட்டங்களிலும், திராவிடர் கழகப் பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமான திரு. நெடுஞ்செழியன் அவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்துவந்து, திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த போது அறிஞர் அண்ணா அவர்கட்கு உற்ற துணையாக இருந்து பணியாற்றினார். முழுநேரப் பிரசாரகராகத் திகழ்ந்தார்.

1955 முதல் 1960-வரை தி. மு. கழகப் பொதுச்செயலாளராகவும், 1960 முதல் இன்றுவரை தி. மு. கழக அவைத் தலைவராகவும் பொறுப்பேற்றிருக்கும் அவர், 1962-ல் நடந்த பொதுத்தேர்தலில் திருவல்லிக்கேணித் தொகுதியில் மகத்தான வெற்றி பெற்று, சட்டமன்றத்தில் 50 பேர் களைக்கொண்ட கழக உறுப்பினர்கட்குத் தலைமைதாங்கி, 'சிறந்த எதிர்க் கட்சித் தலைவர்' என்ற பெருமையையும் பெற்றவராவார்.

பத்திரிகாசிரியர்

தி. மு. க. தோன்றிய நேரத்தில் அண்ணா அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'மாலைமணி' நாளிதழின் துணையாசிரியராகவும். அதன்பின் 'நம்நாடு' நாளிதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

அதற்குமுன், 'திராவிட நாடு' துணையாசிரியராகவும், 'சுதந்தர நாடு' துணையாசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

'மன்றம்' என்ற சிறந்த இலக்கிய இதழைத் தாமே நடத்தி, நாட்டுக்குப் பல நல்ல இலக்கிய விருந்தளித்திருக்கிறார்.

நூலாசிரியர்

'எழுச்சி முரசு', 'சமுதாய விடுதலை', 'புதிய பாதை', 'கலித்தொகை தரும் காதல்', 'புறநானூற்றுப் புதையல்', 'மொழிப்போராட்டம்', 'கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்' போன்ற பல நூல்களையும் திரு. நெடுஞ்செழியன் எழுதியிருக்கிறார்.

அறப்போர் வீரர்

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின்போது அறிஞர் அண்ணா அவர்களுடன் கைதாகி, சிறைத் தண்டனையடைந்த ஐம்பெருந் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. நெடுஞ்செழியன், அதன்பிறகு கழகம் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் கலந்துகொண்டு சிறை சென்றிருக்கிறார்.

தேனி கலவரம்

திரு. நெடுஞ்செழியன் அவர்கள், தேனியில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது, காங்கிரசுக் குண்டர்கள் பெரும் கலவரம் விளைவித்து, திரு நெடுஞ்செழியன் அவர்கள்மீது ஒரு பாருங்கல்லைத் தூக்கிப்போட்டுக் கொல்ல முனைந்ததும், அந்தக் கல் இவர் தலையில் படாமல் உயிர் தப்பியதும் நாடறிந்த நிகழ்ச்சியாகும்.

வெளிநாட்டு பயணம்

தமிழ்நாட்டில் பட்டிதொட்டியெல்லாம் சுற்றிச் சுற்றிக் கழகப் பிரசாரம் செய்தவர் -- திரு. நெடுஞ்செழியன்; அவர் கால் படாத சிற்றூர் -- பேரூரே இல்லை எனச் சொல்லலாம்.

உள்நாட்டுச் சுற்றுப்பயணத்தோடு நின்றுவிடாமல், வெளிநாட்டுச் சுற்றுப்பயணமும் செய்து, (இங்கிலாந்து, மற்றும் ஐரோப்பிய நாடுகள், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை) உலகறிவு சிறக்கப் பெற்றவராவார்.

குடும்பம்

ஒரு காலத்தில், பழுத்த வைதீகக் குடும்பமாக இருந்த நாவலரின் குடும்பம், இவருடைய தந்தையார் காலத்திலிருந்தே பகுத்தறிவுக் குடும்பமாக -- கழகக் குடும்பமாக மாறத் தொடங்கி விட்டது.

தந்தையார் மட்டுமன்றி, நெருங்கிய உறவினர் பலரும் நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கங்களில் ஈடுபாடு கொண்டவர்கள் ஆவர்.

நாவலரின் இளவல் இரா. செழியன், கழக நாடாளுமன்ற உறுப்பினர் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

நாவலரின் தமையனார் பட்டுக்கோட்டை சௌரிராசன், மைத்துனர் சோழவந்தான் ஆவுடையப்பன் ஆகியோரும் கழகத்தவருக்கு அறிமுகமானவர்கள் ஆவர்.

புகழ் பெற்ற டாக்டராகத் திகழும் திருமதி விசாலாட்சி அம்மையாரைத் துணைவியாராகக் கொண்ட திரு. நெடுஞ்செழியன், மதிவாணன் என்னும் ஒரே மகனைப் பெற்றிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணாவையே தமது மூத்த அண்ணனாகக் கொண்டு, கழகமே தம் சொந்தக் குடும்பம் என்று கருதி அயராது உழைத்து வரும் நாவலர் அவர்கள், தமக்கேயுரிய பேச்சாலும், எழுத்தாலும், சிறந்த பண்பாலும், ஒழுக்கத்தாலும், நாட்டு மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறார். எந்தச் சூழ்நிலையிலும் நேர்மை தவறாதவர்; நெறி பிசகாதவர் நடுநிலை வழுவாதவர் என்று மாற்றுக் கருத்தினராலும் மதிக்கப்படுபவர்.

வாழ்க நாவலர் பல்லாண்டு,—
வளர்க அவர்தம் நற்றொண்டு!

காந்தியடிகள் வாழ்வில் தமிழகம் கொண்ட பங்கு

விளக்கிடும் வகையில் சென்னையில் பொருட்காட்சி

தொடர்புடையோருக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, சூலை 9

"காந்தியடிகளின் வாழ்வில் கன்னித் தமிழகம் பெற்ற பங்கு மகத்தானது. நாட்டின் விடுதலைப் போரில் அப்பெருமகனரோடு தோளோடு தோள் நின்றும், தொண்டாற்றியும் அழியாப்புகழ் பெற்றோர் எண்ணற்ற தமிழர் என்பதனை இந்தத் தலைமுறையினருக்கும் மற்றையோருக்கும் சான்றுகளோடு விளக்குவது நமது இன்றியமையாக் கடமையாகும்.

"இதனை உணர்ந்து, தக்கவகையில் செயல்படுமாறு காந்தியடிகளோடு தொடர்புகொண்டது தூயோரையும், தொண்டர்களையும் குடும்பங்களையும் பிறரையும் பணிவன்போடு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று, தமிழகக் கல்வி—தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், காந்தி நூற்றுண்டு விழாத் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது :—

இந்த ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாளிலிருந்து 1969 அக்டோபர் திங்கள் 2-ம் நாள வரை காந்தி நூற்றுண்டு விழா நாடெங்கும் மிகச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்படுவதையொட்டி, சென்னை இராஜாஜி மண்டபத்திற்கு அருகில உள்ள 'லாட்ஜ்' மாளிகையில் காந்தியடிகள காட்சிச்சாலை ஒன்றை அமைக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

காந்தியடிகளின் பசுமையான நினைவைப் பார்ப்பவர் உள்ளங்களில் பதியச் செய்யும் வகையில் இந்தக் காட்சிச் சாலையை நிலையாக உருவாக்கிட அனைத்து முயற்சிகளும் விரைந்து செய்யப்படுகின்றன.

காந்தியடிகளோடு தொடர்பு கொண்ட தமிழ்ப் பெருமக்கள் பலர் தமிழகத்தில் இருக்கின்றனர்; அவரோடு நெருங்கிப் பழகி—கடிதங்கள் எழுதிக் கருத்துக்கள் பரிமாறிக்கொண்ட நல்லறிஞர்கள் உள்ளனர்; அவர்களெல்லாம், காந்தியடிகளின் நினைவையும எழுத்துச் செல்வத்தையும் பொன்னே போல் போற்றுவர் என்பது உறுதி.

அவர்கள், அரசுடனும், காந்தி நூற்றுண்டு விழாக் குழுவினருடனும் சீரிய முறையில ஒத்துழைத்தால், அவர்கள் பெற்ற பேற்றினை மற்றவர்களும் பெற்று மகிழ வழி ஏற்படும். அவர்கள் அருமையாகப் போற்றும் காந்தியடிகளின் நினைவுச் சின்னங்களை அப்படியே கொடுத்து உதவினால் காந்தி நூற்றுண்டு விழாக் குழு நன்றியுடன ஏற்றுக் காட்சியில் வைக்கும்.

கடிதங்கள், நூல்கள் போன்றவற்றை அப்படியே அனுப்ப இயலாதவர்கள், 'படி' எடுத்து அனுப்பி உதவலாம். வருகிற அக்டோபர் 2-ஆம் நாள் இக் காட்சியைத் திறக்க ஆவன

(3-ம் பக்கம் பார்க்க)

இந்தியின் ஆதிக்கம்'

வட்டார மொழிகளை ஒழிக்க வழிகோலும்!

"இந்தி மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதும், சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்ப்பதும், 'தேசிய ஒருமைப்பாட்டுக்கு மொழியால் எந்த நன்மையும் இல்லை' என்பதைக் காட்டுகின்றன!

அலெக்சாந்தர் அல்லது நெப்போலியனிடமிருந்து வந்த ஆக்கிரமிப்பு உணர்ச்சிதான் இந்தி வெறி!

இந்தியாவில் இந்தி பேசுவோர் 20 சதவிகிதத்தினரே; அவர்களில் 15 முதல் 20 சதவிகிதத்தினரே இந்தி பேசவும், எழுதவும் தெரிந்தவர்கள்!

இந்த 'மும்மொழித் திட்டம்' என்பதே நிரந்தரமான ஒன்றல்ல! இந்தி முழு ஆட்சி மொழியாகவும், தேசிய மொழியாகவும் ஆகும் வரையில்தான் இந்தத் திட்டம்! இதன் விளைவு தெளிவாகத் தெரிகிறது!

'ஆட்சி மொழி' என்ற தகுதியினால், இந்தி மொழி, வட்டார மொழிகளை நிர்வாகத்திலிருந்தே ஒழித்துவிடும்!

'தேசிய மொழி' என்ற தகுதியினால், இந்தி அல்லாத மொழிகளை நாட்டிலிருந்தே ஒழித்துவிடும்!

ஒவ்வொரு இந்தியனும் பொது மொழியான இந்தியைக் கற்றுக்கொண்ட பிறகு—இந்திரா காந்தி விரும்புவதைப்போல்—வட்டார மொழிகளுக்கு அவசியமே இல்லாமல் போய்விடும்!

இது எப்படியிருக்கிறது என்றால், ஆகாயத்தில் கோட்டை கட்டுவதைப்போல இருக்கிறது!

இந்தி அல்லாத மாநிலத்தைச் சேர்ந்த சில காங்கிரசுத் தலைவர்கள், தங்கள் சொந்த மொழிகளுக்கு விரோதமாக இந்தித் தலைவர்களுடன் சேர்ந்துகொண்டு இந்தி ஆதிக்கத்தை வளர்க்கிறார்கள்!

இந்தி ஆதிக்கத்தை ஆதரிப்பது என்பது, அயல் நாட்டிற்கு விசுவாசமாக இருப்பதைப் போன்றதாகும்!

இந்திக்காரர்கள் மூன்றாவது மொழி ஒன்றைக் கற்கிறார்களென்றால், அம்மொழியின் மூலம் மற்றவர்களை ஆளுவதற்காகத்தான்!

ஆனால் இந்தி பேசாத மக்கள், மூன்றாவது மொழியான இந்தியைக் கற்றால், அவர்களது தாய்மொழி அடுத்த 50 அல்லது 100 ஆண்டுகளில் மறைந்தொழிந்துவிடும்!"

—'மெயில்' இதழில் பரத்வாஜர்

கழக ஆட்சியின் சாதனைகள்

பல்வேறு துறைகளின் பட்டியல் பாரீர்!

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதுமுதல் கடந்த 15-மாத காலத்தில் ஒவ்வொரு துறையிலும் புரிந்துள்ள சாதனைகளின் பட்டியல் தொடர்ந்து 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டுவருகிறது.

ஏற்கனவே வெளியான பட்டியல்களின் தொடர்ச்சியாக இந்த உள்ளாட்சித் துறை, மாநகர் நலன், பொதுநலத் துறை ஆகியவற்றின் சாதனைகள் தொகுத்தளிக்கப்படுகிறது :—

சென்னை மாநகர் நலன்

1. சென்னை மாநகராட்சியில் உள்ள மக்கள் அனைவருக்கும் கடந்த ஆண்டுமுதல், ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளிக்கப்படுகிறது.
2. நகரத்தில் சுகாதார வசதியைக் கெடுத்துக்கொண்டிருக்கும் கூவம் ஆறு ஆழப்படுத்தப்பட்டு, கடல் நீர் உள்ளே வருமபடி செய்யப்படுகிறது ஆற்றின் இரு கரைகளிலு பூங்காக்கள்—உறை விடுதிகள்—விளையாடுமிடங்கள்—குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு, சென்னை நகர் இயற்கைக் காட்சிகளோடு அழகு கொழிக்கும் நாளாக மாறப்போகிறது.
3. கழக ஆட்சியில் சென்னை நகரின் நீண்டகாலத் தேவையாகிய குடிநீர்ப் பற்றுக்குறையைத் தீர்க்கக் காவிரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்குக் காங்கிரசாட்சி தொடர்ந்து அனுமதி மறுத்துவந்தது.
4. சென்னை மாநகராட்சி தனது வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு கோடி ரூபாய் கடன் எழுப்புவதற்குக் கழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.
5. மேலும், மாநகராட்சியின் திட்டங்களுக்குக் கழக அரசு மானியமும், கடனும் அளிக்கிறது.
6. 'தீத் துயர் துடைப்பு நிதி' வசூல் செய்யப்பட்டு குடிசைகளுக்குப் பதில் தீயினால எரியாத சிமெண்டு தகடு அல்லது ஓடு வில்லை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

★

பொது நலன்கள்

1. அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், தொழிலாளர் நாளான மே முதல் நாள், பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.
2. இஸ்லாம் மதத்தவர்களின் வேண்டுகோளின்படி முகமது நபி பிறந்த நாளும் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.
3. 'திருவள்ளுவர் நாளும்' தி. மு. கழக ஆட்சியில் பொது விடுமுறையாக்கப்பட்டு, மத்திய அரசையும் விடுமுறையாக அறிவிக்கச் செய்தது.
4. தற்பொழுது அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செல்லும்பொழுது அதிகாரிகள் செல்ல வேண்டியதில்லை. போலீசுப் பாதுகாப்பும் மிகவும குறைவாகும். இவற்றால் அரசுக்கு மிகவும் சேமிப்பு உண்டாகிறது.
5. அரசிதழ் பதிவு பெறு அதிகாரிகளும், மாணவர்களின் சான்றிதழை உறுதி செய்யலாம் எனக் கழக அரசு ஆணை பிறப்பித்தது.
6. 'சீரணி'யின்மூலம் மாநிலமெங்கும் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன; புதுச் சாலைகள் போடப்படுகின்றன; ஏரி, குளங்கள் தூர் எடுக்கப்படுகின்றன. இச்சீரணித் தொண்டைக் கண்ணுற்ற குசராத் அரசும, இத்திட்டத்தை அங்கு செயல்படுத்தவிருக்கிறது.
7. காங்கிரசாட்சியில் தீயினால் வீடிழந்த குடிசை வாழ் குடும்பத்தினருக்கு ரூ. 40-தான் கொடுக்கப்பட்டது; அண்ணா ஆட்சியில் ரூ 80 கொடுக்கப்படுகிறது.
8. கழக ஆட்சியில் மதுரையில் ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில பால் வழங்கப்படுகிறது.
9. காங்கிரசாட்சியில் இருந்த கதர் விற்பனையை விடக் கழக ஆட்சியில கடந்த ஆண்டு கூடுதலாக ரூ. 16 இலட்சத்துக்குப் பாடுபட்டு விற்பனை செய்யப்பட்டது.
10. திரைப்படத் தயாரிப்பாளர்கள் வெளிப்புறக் காட்சிகளைப் படம் பிடிக்கக் காங்கிரசு ஆட்சியில் ஒரு நாளைக்கு ரூ. 1,000 செலுத்த வேண்டும். கழக ஆட்சியில் அத்தொகை குறைக்கப்பட்டது; ரூ 1,000, ரூ. 300 ஆகக் குறைக்கப்பட்டது.
11. சிறந்த திரைப் படத்திற்கும், சிறந்த கலைஞருக்கும் அண்ணாவின் ஆட்சி ஆண்டுதோறும பரிசு அளிக்க விரும்புகிறது.
12. இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் வரும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்களை விரைவில முடிக்கிறது. கல்விச் சலுகையும் கொடுக்கிறது; கழக ஆட்சியில், வயது வரம்பிலும் சலுகை காட்டப்படுகிறது.
13. 1957-ல் முதுகுளத்தூர் கலவர வழக்கில் தண்டனை அனுபவித்துவரும் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.
14. சென்னையில் இரு வட்டங்களுக்கு முஸ்லிம் பெரியார்களின் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.
15. கிழக்குக் கடற்கரையில், அழிந்துவிட்ட பண்டைய 'பூம்புகார்' நகரம் புதுப்பிக்கப்படவிருக்கிறது.
16. ஏழைகளுக்குக் குறைந்த வாடகைக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன—கழக ஆட்சியில்; முதலில் கோவையில் கட்டப்பட்ட குறைந்த வாடகை வீடுகள் இந்த ஆண்டே கொடுக்கப்பட்டு விட்டன.
17. திரைப்படத் தொழிலுக்குக் கழக அரசு உதவி அளிக்கவிருக்கிறது. குடும்ப நலத் திட்டத்தைப் பற்றியோ அல்லது சமிழக உல்லாசப் பயண இடங்களைப் பற்றியோ ஒரு திரைப்படத்தில் 5,000 அடி நீளத்திற்குக் காட்சிகள் இருப்பின், கழக அரசு வரிச் சலுகை காட்ட இருக்கிறது.
18. அமைச்சர்கள், முன்பெல்லாம் கவர்னர் மாளிகையில்தான் பதவி உறுதிமொழி எடுத்துக் கொள்வர்; பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்தம் தம்பிமார்களும், மக்கள் மத்தியில் இராஜாஜி மன்றத்தில பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.
19. கழக அமைச்சர்கள் தங்களது சுற்றுப்பயணத்தில் ஒரு கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டாலும், பயணச் செலவை, அரசிடமிருந்து பெறுவதில்லை.
20. தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு மத்திய அரசு கடன் கொடுத்தது அக்கடனைத் திருப்பி வசூலிக்கும்படி மத்திய அரசு வற்புறுத்தியது ஆனால் கழக அரசு கடன் வசூலைத் தள்ளிவிட்டது.

★

உள்ளாட்சித் துறை

1. ஊராட்சிமன்றங்கள், விவசாயத் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான நல்ல விதை—உரம்—பூச்சி மருந்து—ஆலோசனை முதலியவற்றை வழங்குகின்றன.
2. ஒவ்வொரு ஊராட்சிமன்றமும் ஒரு டிராக்டரும், நான்கு 'ஸ்பிரேயர்'களும் வாங்கி, விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. இதனால் நடுத்தர—ஏழை விவசாயிகளும், நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்த வழி ஏற்பட்டது.
3. கடந்த ஆண்டு 1,400 மைல் நீளமுள்ள சாலைகள் போடப்பட்டன.
4. கடந்த ஆண்டு 2,300 குடிநீர்க் கிணறுகளும், 210 குடிநீர்த் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன.
5. ஓராண்டில் 650 பள்ளிக் கட்டிடங்களும், ஆசிரியர்களுக்கு 30 குடியிருப்புக்களும் கட்டப்பட்டன.
6. கடந்த ஆண்டு 160 ரேடியோ செட்டுகள் கிராமங்களுக்கு வழங்கப்பட்டன.
7. பல்வேறு நகரங்களுக்குச் சாலைகள், பாலங்கள் கட்டப்பட்டன. இதனால் போக்குவரத்து வசதிகள் பெருகுகின்றன.
8. காங்கிரசு ஆட்சிக் காலத்தில் பல நகராட்சிகள், வரிகளை உயர்த்தத் திட்டமிட்டிருந்தன. இந்த வரி விதிப்பு உத்தரவுகள், கழக ஆட்சியில் ஒத்திவைக்கப்பட்டன.
9. கும்பகோணம் நகரசபைக்கு 'மகாமகம்' விழா நடத்துவதற்கு உதவியாக ரூ. 2-இலட்சம் தரப்பட்டது.
10. உள்ளாட்சிமன்ற ஊழியர்களுக்கும் அண்ணா ஆட்சியில் 'பென்ஷன்' தரப்படுகிறது.
11. பஞ்சாயத்துச் சாலைகளுக்குக் காங்கிரசாட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்ட மானியம், கழக ஆட்சியில் கொடுக்கப்படுகிறது.
12. மார்க்கெட்டுகள், பஸ் நிலையங்கள் கட்ட நகராட்சிகளுக்கு ரூ 6.48 இலட்சம் உதவியாகத் தரப்பட்டது.
13. மலைப் பகுதி ஊழியர்களுக்குக் குளிர்கால உடை வாங்க முன்பணம் தரப்படுகிறது.
14. கழக ஆட்சியில், உதகை — குன்னூர்— கொடைக்கானல் முதலிய இடங்களிலுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

கடன் வாங்கித் திருமணம் செய்யும் பழக்கம் ஒழிய வேண்டும்

'கல்விக்காகப் பொருளைச் செலவிடுங்கள்'

கண்டமானடி பள்ளி திறப்பு விழாவில் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ கோவிந்தசாமி உரை

3—7—68 காலை 8 மணியளவில் கண்டமானடி அரசினர் உயர்நிலைப் பள்ளித் துவக்க விழா, மாவட்டக் கலெக்டர் ஜே எஸ். பாங்கோ தலைமையில் நடைபெற்றது.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.

நிலமில்லா ஏழைகள் 25 பேர்களுக்குத் தலா ஐந்து செண்ட் வீதம் கல்வியமைச்சரால் 'பட்டா' வழங்கப்பட்டது.

உயர்நிலைப் பள்ளிக்கு விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அடிக்கல் நாட்டினர்.

அடிக்கல்நாட்டு விழாவுக்கு கோளியனூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரைராசன் தலைமை வகித்தார்.

அனைவரையும் வரவேற்று, கண்டமானடி ஊராட்சி மன்றத் தலைவர் எஸ். கோவிந்தசாமி பேசினர்.

இரா. நெடுஞ்செழியன்

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"கண்டமானடியில் உயர்நிலைப் பள்ளி ஏற்பட்டுள்ளது; சுற்றுப்புறக் கிராம மக்கள் கல்வி கற்க நல்ல வாய்ப்பாக உள்ளது.

கல்விச் செல்வம்தான் என்றும் நிலைக்கும்.

கல்விச் செல்வம் உயர்ந்தால் நாட்டின் நிலை உயரும்; நல்ல சனநாயகம் வளரும்.

கல்வி நிறுவனத்துக்கு அனைவரும் நன்கொடை கொடுத்து உதவ வேண்டும்.

நாட்டில் கடன் வாங்கித் திருமணம் செய்தவர்கள்தான் அதிகம்; இந்த நிலை மாறவேண்டும்; பிள்ளைகளைப் படிக்க வைக்கப் பொருட் செலவு செய்தல் வெண்டும்.

பள்ளிகள் ஏற்படுத்திவிட்டால் மட்டும் போதாது; பள்ளியின் வளர்ச்சியில் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும்; ஆசிரியர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

பள்ளியில் பிள்ளைகள் சேருவது பள்ளியின் தரத்தை பொறுத்து உள்ளது; எனவே, பள்ளியை நோக்கிப் பிள்ளைகள் வரும் அளவுக்குப் பள்ளியின் தரத்தை உயர்த்த வேண்டும்."

ஏ. கோவிந்தசாமி

விவசாய அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"இந்த வட்டாரத்தில் எல்லா வசதிகளும் உள்ள கிராமம் கண்டமானடி ஆகும்.

இந்த வட்டாரத்தில் உள்ள பிள்ளைகள் நல்ல முறையில் படித்து முன்னுக்கு வர வசதியாக உளளது.

நல்ல முறையில் கவனித்துப் பள்ளியை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும."

எம். சண்முகம்

சட்டமன்ற உறுப்பினர் திரு.எம். சண்முகமும் பேசினர்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரைராசன் மன்றத்தின் சார்பில் வரவேற்புரை ஆற்றினர்.

கண்டமானடி ஊராட்சி மன்றத்தின் சார்பில் கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு மடல் வாசித்து அளிக்கப்பட்டது.

குளத்தூர் ஊராட்சி மன்றத்தின் சார்பில் அமைச்சர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டு, மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கண்டமானடி உயர் துவக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் ரங்கராசன் நன்றி கூறினர்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் புதியவர் மென்சஸ், மாவட்ட கல்வி அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி, கோட்ட ஆட்சித் தலைவர், மற்றும் மீன்துறை அதிகாரி, மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

அருப்புக்கோட்டையில் தென்காசி வெற்றிவிழா

தென்காசி வெற்றி விழா, அருப்புக்கோட்டை—திருநகரம் தமிழன் பகுத்தறிவு மன்றத்தின் முன்பு உள்ள வள்ளுவர் சதுக்கத்தில், திரு. இரா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அவைத் தலைவர் சிவ, சண்முகசுந்தரனர் முன்னிலையில் வள்ளுவர் கலைக் குழுவின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

தோழர்கள் சோ. முத்துராமலிங்க சேது, மு. குருசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சென்ற ஆண்டு முடிய ரூ. 567-கோடி

பணக்காரர்களிடம் விட்டு வைக்கப்பட்டிருக்கும் வரி

வசூலிக்க வழி கேட்கிறர் மொரார்ஜி தேசாய் !

புதுடில்லி, ஜூலை 10—

"1967 டிசம்பர் 31-ம் நாள்வரையில் வருமான வரிப் பாக்கி ரூ. 567-கோடி என்று மதிப்பிடப்படுகிறது !

"வருமான வரிப் பாக்கிகளை எல்லாம் இரண்டு ஆண்டுகளுக்குள் வசூலிக்கவேண்டும்"

என்று துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் வருமான வரிக் கமிஷனர்கள் மாநாட்டில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இதுவரையில் நாம் பின்பற்றி வந்த நடைமுறைக்கு முற்றிலும் மாறுபட்ட வழியைக் கண்டு பிடிக்கவேண்டும்; அவநம்பிக்கையை விடுத்துத் திறமையை அதிகரிக்கவேண்டும்.

"வரிப் பாக்கிகள் பற்றிய கணக்குகள் இன்னும் சரியாக இருக்கவேண்டும்; வசூலும் இன்னும் துரிதமாக இருக்க வேண்டும்."

கலைக் குழு முகவரி

மு. சுப்பிரமணியன், நிர்வாகி, வள்ளுவர் கலைக் குழு, திருநகரம், (புதிய) 8-வது வட்ட தி மு.க. உட்கிளை, அருப்புக்கோட்டை.

பாரிஸ் நகரில் முரசொலி மாறன்

24 மணி நேரத்தில் கண்ட காட்சிகள்

கப்பலிலிருந்தவாறு அமைச்சர் கருணநிதிக்குக் கடிதம்

சென்னை, ஜூலை 9—

ஹாவர்டு பல்கலைக் கழகம் நடத்தும் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு அமெரிக்கா சென்றுள்ள முரசொலி மாறன் எம்.பி. அவர்கள், அமைச்சர் கருணநிதி அவர்கட்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது :—

"25-ந்தேதி இரவு 2-மணிக்குப் பம்பாயிலிருந்து புறப்பட்டு 26-ந் தேதி மதியம் இந்திய நேரம் 1-30 மணிக்கு (பாரிஸ் நேரம் காலை 9-30 மணி) பாரிஸ் வந்து சேர்ந்தேன். இருப்பது 24 மணி நேரமாதலால், நானே நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். இங்கு மக்கள் எல்லோரும் நண்பர்களாக இருக்கிறர்கள்; எனவே, எந்தச் சிரமமுமில்லை. ஆனல் வெகு பேருக்கு ஆங்கிலமே தெரியவில்லை.

ஏதோ திடீரென்று கனவு உலகத்தில் கண் விழித்ததுபோல் இருந்தது; புகழ்பெற்ற 'எய்பல்' கோபுரத்தில் ஏறிப் பார்த்தேன். எப்போதும் புயல் அடிப்பது போன்ற சப்தம்; காரணம், கார்கள் 'சர் சர்' என்று எப்போதும் அதிவேகமாகச் சென்றுகொண்டிருப்பதுதான் !

இரவு 9-மணிக்கு (பாரிஸ் நேரம்) 75 பிராங்குகள் கொடுத்து இரவில் பாரிசை சுற்றிக் காட்டும் ஒரு டஸ்ஸில் ஏறிக்கொண்டேன். நியான் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு நகரம் நாம் கற்பனை செய்யும் 'இந்திரலோகம்' போல் காட்சியளித்தது. இங்கு நடைபெறும் இசை நாடகங்கள் நாம் நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத அளவில் பிரும்மாண்டமாக நடத்தப்படுகின்றன.

மேடையில் திடீரென்று தண்ணீர்த் தொட்டி (கண்ணடியால் ஆனது) உயரே எழுகிறது; அதிலே ஒரு பெண் மூழ்கி நடனமாடுகிருள்; சில நிமிடங்களுக்கு ஒரு தடவை உயிர்க் காற்று வரும் ரப்பர் குழாயின் உதவியால் சுவாசித்துவிட்டு (தண்ணீர்த் தொட்டிக்குள்ளாகவே) தொடர்ந்து மீன்போல் நீந்திக் கொண்டிருக்கிருள்.

இன்னேர் இசை நாடகம்—அதில் ஒருவனை இன்னெருவன் துரத்துவது போன்ற அமைப்பு; திடீரென்று உயரே இருந்து நீர்வீழ்ச்சிபோல தண்ணீர் கொட்டுகிறது; அதிலே, ஓடிக்கொண்டிருப்பவன் தொத்திக்கொண்டிருக்கிறன்; கீழே இருப்பவன் துப்பாக்கியால் சுட — அவன் அந்த நீர்வீழ்ச்சிக்கு கீழே (அதாவது பூமிக்கு அடியிலிருக்கும் தண்ணீர்த் தொட்டியில்) 'தொப்'பென்று விழுகிறன்; நாம் சினிமாவில்கூடக் காட்ட முடியாத அளவில் காட்சிகளை அமைத்திருக்கிறர்கள் !

விளக்கு அலங்காரமும் அப்படித்தான்; டெக்னிக் கலரில்கூட இப்படிக் கண்ணைப் பறிக்கும் விதத்தில் காட்ட முடியாது என்று கருதுகிறேன்.

மறுநாள் காலை, 'லீ ஹாவ்ரே' என்ற துறைமுகத்திற்கு இரயில் மூலம் அங்கிருந்து சென்று 'எஸ். எஸ். பிரான்ஸ்' என்ற கப்பலில் பயணமானேன்; இது உலகிலேயே மிகவும் நீளமான கப்பல்; சுமார் 2,000-பேர் பயணம் செய்கிறர்கள. கப்பல் ஒரு பெரிய நகரம்போல இருக்கிறது; இங்கு நமது ஊர்ப் பெரிய தியேட்டர்போல ஒன்று இருக்கிறது. அதில் தரமான படங்களைத் திரையிடுகிறர்கள்.

நாள்தோறும் கப்பலிலேயே 'அட்லாண்டிக்' என்கிற பெயரில் முக்கியச் செய்திகள் அடங்கிய பத்திரிகை ஒன்றை அச்சிட்டுப் பயணிகளுக்கு இலவசமாக வழங்குகிறர்கள்; அது நமது 'முத்தாரம்' அளவில் -- ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்படுகிறது.

கப்பல் முழுவதும் 'ஏர்-கண்டிஷன்' செய்யப்பட்டிருக்கிறது. கப்பல் அசைவதே தெரியவில்லை. நேற்றுத்தான் கொஞ்சம் காற்று பலமாக இருந்தது. அப்போதுதான் கொஞ்சம் அசைவு தெரிந்தது. நானும் ஒரு இத்தாலி நாட்டுக்காரரும் ஒரே அறையில் தங்கியிருக்கிறேம். கப்பலிலிருந்தே இந்தக் கடிதம் எழுதுகிறேன்."

சமுதாயச் சீர்திருத்த -- விவசாய மாநாடுகள்

ஜூலை 12, 13 (வெள்ளி-சனி)

ஆகிய நாட்களில்

மாயூரம் வட்டம் மணல்மேட்டில்

வெள்ளைச்சாமி பந்தல் -- மாணவர் சாரங்கபாணி அரங்கில்

நடைபெறும்.

★

சமுதாயச் சீர்திருத்த மாநாடு : 12--7--68

தலைவர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
திறப்பாளர் : வி. மாயவன் எம்.பி.
கொடியேற்றுபவர் : எஸ். கணேசன் எம்.எல்.ஏ.
வரவேற்பாளர் : என். கிட்டப்பா எம்.எல்.ஏ.

சொற்பொழிவாளர்கள் :

என். வி. நடராசன் எம்.எல்.சி. — புலவர் கூ. ஆறுமுகம்
தில்லை வில்லாளன் எம்.பி. — க. முருகையன் எம்.எல்.ஏ.
திருவாரூர் கே. தங்கராசு — மா. செங்குட்டுவன்
புலவர் அறிவுடைநம்பி — எஸ். ஆர். இராதா

சிறப்புரை : தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

திருமதி சத்தியவாணிமுத்து

மணிவண்ணன்—பத்மினி குழுவினர்; முருகு பாண்டியன் குழுவினர் ஆகியோரின் கலைநிகழ்ச்சிகளும், திருவெண்காடு திரு. டி. பி. சுப்பிரமணியம் அவர்களின் நாதசுர இசை நிகழ்ச்சியும் உண்டு.

இரவு—திரு. டி. கல்யாணசுந்தரம் தலைமையில் சொர்ணம் தீட்டிய 'விடைகொடு தாயே' நாடகம் நடைபெறும்.

காலை—9-மணிக்கு பட்டவர்த்தி சந்தைத் தோப்பிலிருந்து மாயூரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. வி. கோவிந்தசாமி தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மாநாட்டுப் பந்தலை வந்தடையும்.

★

விவசாய மாநாடு : 13--7--68

தலைவர் : வேளாண்மைத்துறை அமைச்சர்

திரு. ஏ. கோவிந்தசாமி

திறப்புரை : மன்னை ப. நாராயணசாமி
வரவேற்பு : என். கிட்டப்பா எம்.எல்.ஏ.

சொற்பொழிவுகள் :

எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., காட்டூர் கோபால், கோ.சி. மணி எம்.எல்.சி., ஆ. துரையரசன் எம்.எல்.ஏ., சி. கிருஷ்ண மூர்த்தி எம்.எல்.ஏ., கா. சுப்ரவேலு எம்.பி., எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., குளித்தலை முத்துகிருஷ்ணன், சு. தேன்கோவன், ம. கோ. மணி, நன்னிலம் நடராசன், யா. சேவியர், திருமதி கிரேசி சேவியர், வடகால் அமீது, இரா. இராசன், கு. அடைக்கலம், போன். தர்மன்.

சிறப்புரை : பொதுப்பணித்துறை அமைச்சர்

திரு. மு. கருணநிதி

சிவகங்கை சேதுராசன் குழுவினரின் பலகுரல் கலைநிகழ்ச்சியும்; இசைமுரசு நாகூர் அனிபா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் உண்டு.

இரவு 10-மணிக்கு — எம். கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ. தலைமையில் திரு. மு. கருணநிதி அவர்கள் தீட்டிய **'காகிதப் பூ'** நாடகம் நடைபெறும்.

விவசாயத் தொழிலாளர் பெருங்குடி மக்களே திரண்டு வாரீர் !

—உழவர் முன்னேற்ற சங்கம், மணல்மேடு வட்டாரம், மாயூரம்

காந்தியடிகள் வாழ்வில்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு வருவதால் விரைந்து அனுப்புவது மிகுந்த நலம் பயக்கும்.

நினைவுச் சின்னங்களைபோ, கடிதங்கள் போன்றவற்றின் நகல்களையோ அனுப்ப வேண்டிய முகவரி :—திரு. கா. திரவியம், காந்தி நூற்றுண்டு விழாக் காட்சிசாலைக் குழுத் தலைவர், சென்னை-9.

வழியனுப்பு விழா

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 25—6—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் நடந்த 20 மாதகாலம் ஆணையராகப் பணிபுரிந்து திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வட்டார வளர்ச்சிப் பிரிவு சிரஸ்ததாராக மாற்றலாகிச் செல்லும் திரு. பெ. வேலாயுதம் அவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், வழியனுப்பு விழா நடத்தினர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

12-7-68

வேடசந்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு காந்தியார் திடலில்; தலைவர்: வி. நாகசுந்தரம்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், எஸ். முத்து எம்.எல்.சி., மு. காதர்சா பி.ஏ., ப. முத்துசாமி பி.ஏ.பி.எல்., எஸ்.வி. ஆறுமுகம்.

வைரிசெட்டிபாளையம்

நெடுஞ்செழியன் மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு பிள்ளையார் கோயில் முன்பு; தலைவர்: நெ. இராமசாமி; பேசுவோர்: ப. தண்டபாணி, எஸ். ஏ. ஜி ராபி, மா. நடராசன், கை. ஆறுமுகம், பா. அரங்கராசன், மு. தமிழ்மாறன், மற்றும் பலர்.

13-7-68

வெளிக்கூனங்குறிச்சி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: பி. நாகமுத்து; பேசுவோர்: எஸ். எஸ் நேசன், இரா. கரிகாலன், எம் ப லகிருட்டிணன், டி. இன்பபெருமாள், எம். மாயவேல், டி. தர்மலிங்கம் ஏ. பழனி.

சிவகாசி

பேரறிஞர் அண்ணா மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு தென்காசி வெற்றிவிழா; மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: ஏ. துரைக்கண்ணன்; பேசுவோர்: வெ. கண்ணன், மற்றும் பலர்.

துத்திப்பட்டு

தி. மு. க. சார்பில் மாலை 7-30 மணிக்கு; தலைவர்: கு. ஆனந்தம் பேசுவோர்: ஜி. குசேலர் எம்.பி., ஆர் சம்பங்கி, பி. செயராமன், ஜி. வி. முனிரத்தினம், எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., எ. க துரைசாமி, கே. வேணுகோபால்.

திருச்சி

7-வது வட்ட தி மு. க.—என். எஸ் கே. படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு புத்தூர் வன்னியடிபதி திரு.வி.க. நகரில்; தலைவர்: பி. ஏ. சின்னப்பன்; பேசுவோர்: எம் எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அ. நடராசன், எஸ். ஏ. ஜி. ராபி, ஆர். வி. கிருஷ்ணமூர்த்தி, (தேவராசன்—நிர்மலா குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

அரசிதழ் பதிவுரு அரசு ஊழியர் மாநாடு

முதலமைச்சர் அண்ணா கலந்து கொள்கிறார்

தமிழ்நாடு அரசிதழ் பதிவுரு அரசு ஊழியர் ஒன்றியத்தின் 44-வது மாநாடு, 13—7—68 காலை 10-மணிக்கு சென்னை எழும்பூர் பெரியார் திடலில் நடைபெறும்.

ஒன்றியத் தலைவர் திரு. வி. தேவநாதன் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டை, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன் ஐ.சி.எஸ். துவக்கிவைப்பார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் சிறப்புரையாற்றுவார்கள்.

மற்றும் சிவ. இளங்கோ, வி. ஆர். கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் பேசுவர்.

காலை 8-மணிக்கு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி நாயுடு தெருவிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மாநாட்டடையும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீடு பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அமுதின் அச்சகத்தில் (24, சூளை நாராயண செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கழக ஆட்சியின் சாதனைகள் --- பட்டியல்கள் பாரீர்!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நகராட்சி ஊழியர்களுக்கு 'மலைப் பகுதிப் படி' தரப்படுகிறது.

15. காங்கிரசாட்சியில் கலைக்கப்பட்ட திருநெல்வேலி அருப்புக்கோட்டை முதலிய நகராட்சிகள் மீண்டும் இயங்க அண்ணா ஆட்சியில் சட்டம் கொண்டு வரப்பட்டது.

16. நகராமன்ற கல்வி அதிகாரிகளின் ஓய்வுபெறும் வயது மற்ற ஆசிரியர்களைப்போல 58 ஆக உயர்த்தப்பட்டது.

17. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும், 'திருமண மண்டபங்கள்' கட்டப்படுகின்றன.

18. ஊராட்சி ஒன்றியங்கள், அறிஞர் அண்ணாவின் 60-ஆம் பிறந்த நாள் விழாவில் தங்களின் 'ஓராண்டுத் திட்ட'ங்களை நிறைவேற்றவிருக்கின்றன.

19. ஒவ்வொரு ஒன்றியத்திலும், சீரணி மூலம் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன; ஏரி, குளம் தூர் எடுக்கப்பட்டன; பழைய சாலைகள் செப்பனிடப்பட்டன; புதிய சாலைகள் போடப்பட்டன.

20. இந்த ஆண்டில், ஒன்றியச் சாலைகளில், 300 மைல் நீளச் சாலைகளைத் தமிழக அரசு எடுத்துக் கொள்கிறது. இதனால், ஒன்றியங்களின் சாலைப் பராமரிப்புச் செலவு குறையும்.

—தொகுத்தவர் : மு. இளங்கோ

தி. மு. கழக

பெருநகரக் கிளைத் தேர்தல்கள் :

14-7-68

1. கீழ்க்காணும் பெருநகரக் கிளைகளுக்கான தேர்தல்கள். 14—7—68 ஞாயிறன்று, மாவட்டச் செயலாளர் அனுப்பும் ஆணையாளரின் தலைமையில் நடைபெற வேண்டும்.

2. ஒவ்வொரு நகரிலும் அந்தந்த உட்கிளை(வார்டு கிளை)களிலிருந்து முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்கள், மற்றும் நகரக் கிளைக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர் மட்டுமே பெருநகரக் கிளைத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமைபடைத்தவராவார்கள்.

3. பெருநகரக் கிளைத் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை படைத்த பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் தலைமைக் கழகத்திலிருந்து நேரடியாக 'பெருநகரக் கிளைப் பிரதிநிதிச் சீட்டு' அனுப்பப்பட்டுள்ளது. அந்தச் சீட்டு (கார்டு) உள்ளவர்கள் மட்டுமே தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ள உரிமையுள்ளவர்களாக ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

4. பெருநகரக் கிளைகளின் தேர்தல் மாவட்டச் செயலாளரால் அனுப்பி வைக்கப்படும் ஆணையாளரின் தலைமையில்தான் நடைபெற வேண்டும். தேவையானால், மாவட்டச் செயலாளர் கேட்டுக்கொள்வதற்கேற்ப. தலைமைக் கழகத்தின் பிரதிநிதியின் தலைமையில் தேர்தல் நடைபெறும்.

5. பெருநகரக் கிளையின் எந்தப் பொறுப்புக்கும் போட்டியிடும் எந்த உறுப்பினரும் குறைந்தது ஐந்தாண்டுக்காலமாவது கழகத்தில் தொடர்ந்து உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.

6. பெருநகரக் கிளைத் தேர்தல்களில் போட்டியிடுபவர்மீது, 'ஐந்தாண்டுக்காலம் தொடர்ந்து உறுப்பினராக இல்லை' என்ற ஐயம் எழுப்பப்படுமாயின்—அவர் ஐந்தாண்டு தொடர்ந்து உறுப்பினராக இருந்து வருவதாகத் தலைமைக் கழகத்திலிருந்து சான்றிதழ் பெறுவராக இருந்தால்—ஏற்கனவே நிவாகப் பொறுப்பில் இருந்த இருவர், அவர் ஐந்தாண்டுக்கால உறுப்பினர் என்பதற்கான உறுதியளிப்பின, அவர் வேட்பு மனுவை ஆணையாளர் ஏற்றுக்கொள்வார். பின்னர், தலைமை கழகத்தால் ஆராயத்தக்கப் பிறகு, அளிக்கப்பட்ட உறுதி தவறுயின் உறுதியளித்தவர்கள் மீதும் குறிப்பிட்ட வேட்பாளர்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

7. பெருநகரக் கிளையின் அலுவலாளர், மேலமைப்புப் பிரதிநிதிகளுக்கான தேர்தல்களில்: அந்தந்த பெருநகரத்தைச் சார்ந்த உறுப்பினர் யாரும் போடடியிடலாம். (ஆனல், தேர்தல்களில் வாக்களித்துத் தேர்ந்தெடுப்பவர்கள் தலைமைக் கழகத்திலிருந்து பிரதிநிதிச் சீட்டுப் பெற்ற பிரதிநிதிகளே ஆவர்.)

8. பெருநகரக் கிளைத் தேர்தல்கள்—அவைத் தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகிய நான்கு அலுவலாளர்களையும், வட்டக் கழகத்திற்குப் பத்துப் பிரதிநிதிகளையும், செயற்குழு உறுப்பினர்களாக 15 பேரையும் முறைப்படி முறையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

9. வட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், அந்தத் தகுதியினாலேயே பெருநகரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக ஆகமாட்டார். அவர், செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்களில் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்படலாம்.

10. எந்த ஒரு பொறுப்புக்கான தேர்வானாலும், அதில் போட்டியிட விரும்புபவர்கள் அதற்குரிய விண்ணப்பத் தாளை நிறைவு செய்து, முன்மொழிபவர்—வழிமொழிபவர் கையெழுப்பங்களுடன் போட்டியிடுபவரோ, வழிமொழிபவரோ தேர்தல் ஆணையாளரிடம் முறைப்படி உரிய கட்டணத்துடன் சேர்ப்பிக்க வேண்டும்.

11. பெருநகரக் கிளைத் தேர்தல்களின் எந்தப் பொறுப்புக்கு ஆனாலும் (செயற்குழு உறுப்பினர் பொறுப்பு உட்பட) போட்டியிடும் தோழர்கள், தங்கள் வேட்பாளர் விண்ணப்பத் தாளுடன் ரூ. 2 விண்ணப்பக் கட்டணமாகத் தேர்தல் ஆணையாளரிடம் செலுத்தி அவர் கொடுக்கும் இரசீதினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் தொகை போட்டியிடுவதிலிருந்து முன்கூட்டியே விலகிக்கொண்டால் தவிர, எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

12. அந்தந்தப் பொறுப்புகளுக்குப் போட்டியிட்ட தோழர்கள் அனைவராலும் செலுத்தப்பட்ட தொகை முழுவதையும், முறைப்படி தலைமைக் கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கும் பொறுப்பைத் தேர்தல் ஆணையாளரும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரும ஏற்க வேண்டும்.

13. நடைபெறும் தேர்தல்களில் எந்தப் பொறுப்புக்கான தேர்தலானாலும் தேர்தல் துவக்கப்படுவதற்குமுன் ஆணையாளரிடம் எழுத்து மூலமாகத் தக்க ஆதாரத்துடன் தரப்படும் ஆட்சேபனைகளை மட்டுமே ஆணையாளர் பதிவு செய்துகொள்வார். அவ்வித ஆட்சேபனைகள் தலைமைக் கழகத்தால் வசதிக்கேற்பப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

14. தேர்தல் குறித்த மற்ற நடைமுறைகள் அனைத்தும் கழகச் சட்ட திட்டம்—தேர்தல் விதி முறைகளில் கண்டுள்ளவைகளின்படி கடைபிடிக்கப்படுதல் வேண்டும்.

14-7-68-இல் தேர்தல் நடைபெறவேண்டிய நகரங்கள் :--

1. செங்கற்பட்டு	8. பொள்ளாச்சி
2. தாம்பரம்	9. இராசபாளையம்
3. திருவொற்றியூர்	10. திருவில்லிபுத்தூர்
4. விழுப்புரம்	11. விருதுநகர்
5. கடலூர்	12. பாளையங்கோட்டை
6. நாகப்பட்டினம்	13. புதுக்கோட்டை
7. திருவரங்கம்	14. கடையநல்லூர்

— தலைமைக் கழகம் (தி மு.க)

குறிப்பு :—வார்டு கிளைகள் அமைக்கப் பெற்ற மற்ற பெருநகரக் கிளைகளுக்கான தேர்தல் நாள் அடுத்து அறிவிக்கப்படும்.

கல்வியில்

முன்னேறுகிறது தாய்க்குலம்

சென்னை, சூலை 9—தமிழகத்தில் எஸ். எஸ். எல். சி. தேர்வில் 500-க்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற 55 பேரில் 19 பேர் பெண்கள்!

மொத்தம் தேர்வு எழுதிய 2,00,500 பேர்களில், 52.4 சதவிகிதம் பேர் தேறியுள்ளனர்.

நாகர்கோயில் செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த கே. பரிமளம் என்னும் மாணவி, தமிழ்நாட்டிலேயே முதலாவதாகத் தேறியிருக்கிறார். மொத்தம் 600-க்கு 529 மதிப்பெண்களை பெற்றிருக்கிறார்.

பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த கே. வரதராசன் என்னும் மாணவன் இரண்டாவதாகவும் (525 மதிப்பெண்கள்) கோவை ஆர். எஸ் புரத்தைச் சேர்ந்த நகராட்சிமன்ற உயர்நிலைப் பள்ளி மாணவன் மீனாகுருடட்ராவ் என்பவர் மூன்றாவதாகவும் (524 மதிப்பெண்கள்) தேறியுள்ளனர்.

இத்தகவல்களை கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சென்னைக் கலைக் கல்லூரி மாணவர் பிரச்சினை

சென்னை, சூலை 10—சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் முதலாண்டு பட்டப் படிப்பு மாணவர்கட்கு டி. சி. கொடுத்தனுப்பியது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையை மறு பரிசீலனை செய்யுமாறு அந்தக் கல்லூரி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருப்பதாகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மணப்பாறை நகரக் கிளைத் தேர்தல்

ஆணையாளர்

ஜி. பரங்குசம் எம்.எல்.சி.

"ஏற்கனவே அறிவிக்கப்பட்டதையொட்டி திருச்சி மாவட்டம் மணப்பாறை நகர எல்லைக்குள் அடங்கிய மஞ்சம்பட்டி, குமாரப்பட்டி, கள்ளிப்பட்டி, கண்ணுடையான்பட்டி, கலிக்கப்பட்டி, மணப்பாறை ஆகிய பகுதிகளின் பேரால் தனித்தனியாகச் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் மணப்பாறை நகரக் கிளைத் தேர்தல்கள் 14-7-68 அன்று காலை 10 மணிக்கு மாவட்டச் செயலாளர் சார்பான ஆணையாளர் திரு. ஜி. பரங்குசம் அவர்கள் தலைமையில் நடைபெறும்''

என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

நூல் வெளியீட்டு விழா

நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தின் சார்பில், 'மீனவர் எழுச்சி', 'காலம் வினைதே' என்னும் நூல்கள் வெளியீட்டு விழா, 12—7—68 மாலை 5-30 மணிக்கு எழும்பூர் அசோகா ஓட்டலில் நடைபெறும்; பொதுப் பணியமைச்சர் திரு. மு. கருணாநிதி வெளியிடுவார்; திரு. எஸ் மோகன்குமாரமங்கலம் தலைமைவகிப்பார்.

காவிரி வெள்ளத்துக்கு 15 பேர் பலி

திருச்சி, சூலை 11—திருச்சியிலிருந்து 50 மைல் தொலைவிலுள்ள ஸ்ரீராம சமுத்திரம் என்ற இடத்தில், காவிரியாற்றைக் கடந்து கொண்டிருந்த படகு கவிழ்ந்ததால் 15 பேர் வெள்ளத்தில் அமுழ்ந்து மாண்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

மேட்டூர் தேக்கம் திறக்கப்பட்டு, காவிரியாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருப்பதால், படகு கவிழ்ந்ததும் பலருக்கு நீந்திக் கரை சேர இயலவில்லை.

மாண்டவர்கள் அனைவரும் பெண்கள்.

மற்றும் 23 பேர் எப்படியோ நீந்திக் கரை சேர்ந்துவிட்டனர்.

மேலும் சிலர் வெள்ளத்தில் மூழ்கி மாண்டிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

தீயணைக்கும் படையினர் விரைந்து வந்து ஆற்றில் பிணங்களைத் தேடுகின்றனர்.

விபத்துச் செய்தி எட்டியவுடன், மாவட்ட கலெக்டர் அந்த இடத்துக்கு விரைந்துள்ளார்.